செ.வெ.எண் : 150 நாள் : 05.07.2021

**காஞ்சிபுரம் நகர்புற பகுதிகளில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இருக்கக்கூடிய முன்களப் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் வகையில் கொரோனா தடுப்பூசி நடமாடும் வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்**

இன்று (05.07.2021) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காஞ்சிபுரம் நகர்புற பகுதிகளில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இருக்கக்கூடிய முன்களப் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் வகையில் கொரோனா தடுப்பூசி நடமாடும் வாகனத்தை (Mobile Vaccination Vehicle) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் :**

கொரோனா நோய்த்தொற்றை கட்டுப்படுத்த தமிழக அரசு எடுத்துள்ள பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் கொரோனா நோய்த்தொற்று வெகுவாக குறைந்துள்ளது. அதேபோல காஞ்சிபுரம் மாவட்டத்தில் போர்கால அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் கொரோனா தாக்கம் படிப்படியாக குறைக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தடுப்புப்பணிகளில் உள்ள முன்களப்பணியாளர்களுக்கும் மற்றும் இணைநோய் உள்ளவர்களுக்கும் தடுப்பூசி அளிக்கப்பட்டு கொரோனா தாக்கம் முற்றிலுமாக தடுக்கப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் தடுப்பூசி முகாம்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும், நகர்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் முகாமிட்டு அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இதுவரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2,09,048 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா தடுப்பூசி செலுத்துவதை அதிகப்படுத்தும் நோக்கத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள நகர்புற பகுதிகளில் மக்கள் அதிகமாக கூடும் இடங்களான அங்காடிகள், வழிபாட்டுத்தளங்கள், சிறு குறு வியாபாரிகள் போன்ற முன்களப்பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் நடமாடும் தடுப்பூசி வாகனம் (Mobile Vaccination Vehicle) தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முதற்கட்டமாக காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளில் உள்ள மார்கெட்டில் இருக்கக்கூடிய காய்கறி, பழங்கள் விற்பனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த நடமாடும் தடுப்பூசி வாகனத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.பன்னீர்செல்வம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பி.ஜெயசுதா, இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.ஜீவா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பழனி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**